# குழந்தைகளின் இருதயத்தில் ஏற்படும் துளைகளை துவக்கத்திலேயே கண்டுபிடித்து சரி செய்யலாம்

## கே.எம்.சி.எச்.டாக்டர் மினோதி சுபாஷ் காலே விளக்கம்

**கோவை, ஏப்.10:**பிறவியிலேயே இருதயத்தில் ஏற்படும் துளைகள் வயது ஆக ஆக தானாக குணமாகாது. அவற்றை உரிய காலத்தில் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதின் மூலம் சரி செய்யலாம். இது குறித்து குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் மினோதி சுபாஷ் காலே கூறியதாவது:


டாக்டர் மினோதி சுபாஷ் காலே

சில குழந்தைகளுக்கு இருதயத்தில் உள்ள துளைகள் அவர்கள் பிறந்தது முதலே இருக்கும். கருப்பையில் இருதயம் உருவாகும்போதே, தவறுதலாக இந்த துளைகளும் ஏற்பட்டு விடுகின்றன. இது உருவாகுவதற்கான சரியான காரணங்களை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தாலும் இது பல காரணங்களால் உருவாகலாம் என்று கருதப்படுகிறது. அவற்றில் மிக முக்கியமானதாக கருதப்படுவது மரபணு மற்றும் சுற்றுச்சூழல் தாக்கமே ஆகும்.

இருதயத்தில் உள்ள துளைகள் பல வகைப்படும். ஏஎஸ்டி *(ASD)*, விஎஸ்டி *(VSD)*, பிடிஏ *(VAD)*, ஏபிடபிள்யூ*(ABW)* ஆகியவை இருதயத்தில் ஏற்படும் துளைகளாகும். இவை இருதயத்தில் எந்த பகுதியில் வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த துளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் செயல்படும். இவை ஒன்றோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட துளைகளாக ஏற்படலாம். இவை பெரும்பாலும் பிறவிக்குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு வரும் வாய்ப்புகள் அதிகம்.

இந்த குறைபாடை துவக்க நிலையிலேயே கண்டுபிடித்து உரிய சிகிச்சை மூலம் சரி செய்ய முடியும். உரிய காலத்தில் கண்டுபிடிக்காவிட்டால் அது வேறு விதமான பக்க விளைவுகளை ஏற்படுத்தும். இதனால் துவக்க நிலையிலேயே ஆய்வு செய்து உரிய சிகிச்சை எடுக்க வேண்டும்.

இதை அறிந்து கொள்வதற்கு ‘எக்கோ டெஸ்ட்’ *(ECHO)* எனும் எளிய சோதனையை செய்யவேண்டும். இந்த சோதனை முற்றிலும் பாதுகாப்பானது. இந்த சோதனையை குழந்தைகளுக்கான சிறப்பு இருதய நோய் நிபுணர்கள் மேற்கொள்வார்கள். இந்த சோதனையை வெளி நோயாளியாக இருந்தே மேற்கொள்ளலாம்.

மேலும் நோயாளியின் குடும்பத்தில் மற்ற உறுப்பினர்களில் யாருக்காவது இந்த பிறவிக்குறைபாடு இருந்தால், அவர்களும், அவர்களது குழந்தைகளும் அவசியம் இந்த சோதனையை மேற்கொள்வது நல்லது.

கர்ப்பிணி பெண்களின் உறவினருக்கோ அல்லது முந்தைய குழந்தைக்கோ இதயத்தில் கோளாறு இருந்தால் அப்பெண்கள் கரு எதிரொலி சோதனை (ஃபீட்டல் எக்கோ டெஸ்ட்) கருத்தரித்த 16 – 18 வார காலத்தில் மேற்கொண்டு கருவில் உள்ள குழந்தைக்கு பிறவியிலேயே குறைபாடு உள்ளதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இருதயத்தில் உள்ள துளைகளை ஏஎஸ்டி, பிடிஏ, விஎஸ்டி ஆகிய கருவிகள் மூலமாகவும் குணமாகலாம். சில குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம். அது குழந்தையின் தன்மையை பொறுத்து மருத்துவர்கள் முடிவு செய்து சிகிச்சையை மேற்கொண்டு சரி செய்வார்கள்.

மேலும் விபரங்களுக்கு, குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் மினோதி சுபாஷ் காலே, கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : +91 422 4324531, இ-மெயில் : *drminoti@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

*–Advt*